| | | |
|---|---|---|
| சாட்சி : DW 3<br>பாலகுமாரவேல் | அ.வ.எண்.220/2017 | 10.10.2022 |

குறுக்கு விசாரணை

எனக்கு சொந்த ஊர் இலால்குடி தான். வழக்கின் 5ம் பிரதிவாதி சௌந்தரராஜன் எனது நெருங்கிய நண்பர் ஆவார். அவர் சொல்லி தான் அவரது குடும்ப விவரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 5ம் பிரதிவாதியுடன் பிறந்தவர்கள் யார் யார் என்பது 5ம் பிரதிவாதி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வேலாயுதத்திற்கு தாவா சொத்து எப்படி பாத்தியப்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு எப்படி பாத்தியப்பட்டது என்றால் 1ம் பிரதிவாதியின் சொந்த நிலம் என்பது எனக்கு தெரியும் 1ம் பிரதிவாதியின் சொந்த உழைப்பில் தாவா சொத்து வாங்கப்பட்டது என்பதும் தெரியும். தாவா சொத்துக்கள் 1ம் பிரதிவாதி எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. தாவா சொத்துக்களை 1ம் பிரதிவாதி யாரிடம் வாங்கினார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆனால் தாவா சொத்தினை அவரது சொந்த உழைப்பில் வாங்கினார் என்பது தெரியும். நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் 1ம் பிரதிவாதி தாவா சொத்தினை தனது சொந்த உழைப்பில் தான் வாங்கினார் என்று என்னிடம் சொன்னார் என்பது குறித்து சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 5ம் பிரதிவாதி வேண்டுகோளின் படி நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு நாளது தேதியில் யார் பெயரில் கிரையப்பத்திரம் இருக்கிறது என்றால் 5ம் பிரதிவாதி பெயரில் தான் உள்ளது. தாவா சொத்துக்கள் 5ம் பிரதிவாதி

பெயரில் இல்லை என்றாலும், மோசடியான செட்டில்மெண்டு ஆவணத்தின் அடிப்படையில் 07.07.2022 தேதியில் சந்திர சேகருக்கு பெயராளவில் ஒரு பத்திரம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் 3ம் பிரதிவாதி செல்வி என்பவரும் 23.07.2021 தேதியில் மோசடியான கிரையப்பத்திரம் ரெங்கராஜ் என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. எனக்கு தொழில் ரியல் எஸ்டேட் தொழில் என்றால் சரியல்ல. நான் செல்போன் சர்வீஸ் செய்து வருகிறேன். வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் நான் தாவா சொத்துக்களை பார்க்க நான் ஆட்களை கூட்டிச்சென்றேன் என்றாலும், அப்போது ஊர்காரர்கள் என்னையும், 5ம் பிரதிவாதியும் பிடிக்க முற்பட்ட போது நாங்கள் அங்கிருந்து தப்பி சென்றுவிட்டோம் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக வாதிகள் மற்றும் 5ம் பிரதிவாதி பெயரில் இலால்குடி காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் வழக்கு பதிவு செய்யப்பட்டதாக கேள்விபட்டேன். மேற்கண்ட புகாரில் நானும் சம்மந்தப்பட்டுள்ளேன் என்றாலும், எனது பெயர் தெரியாத காரணத்தினால் தான் அந்த புகாரில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட குற்ற வழக்கு எதனால் ஏற்பட்டது என்றால் 5ம் பிரதிவாதி சாகுபடி செய்த போது அவர்கள் தகராறு செய்தார்கள் அதனால் தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது. எந்த காலத்திலும் 5ம் பிரதிவாதி தாவா சொத்தினை சாகுபடி செய்யவில்லை என்றாலும், 5ம் பிரதிவாதி

எனது நண்பர் என்பதால் நான் பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் கணேஷன் என்பவரை அழைத்து வந்து இலால்குடி சார் பதிவகத்தில் அருகில் வைத்து ஒரு பத்திரம் எழுதினோம் என்றால் வழக்கிற்கு முன்னதாகவே நாங்கள் எழுதி வாங்கிவிட்டோம். மேற்படி பத்திரம் எதற்கு எழுதி வாங்கினோம் என்றால் ஒத்திக்கு தான் எழுதி வாங்கினோம். மேற்கண்ட ஆவணம் இந்த வழக்கிற்கு பின்னிட்டு தான் நான், 5ம் பிரதிவாதி மற்றும் கணேஷன் ஆகியோர் சேர்ந்து தான் பொய்யாக தயார் செய்தோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தினை எந்த தேதியில் எப்போது ஒத்திக்கு வைக்கப்பட்டது என்றால் சரியாக தேதி தெரியவில்லை. மேற்கண்ட ஒத்தியை எப்போது திருப்பப்பட்டது என்றால் 2017 திருப்பப்பட்டது ஆனால் தேதி, மாதம் சரியாக தெரியாது. மேற்கண்ட ஒத்தி நடக்காத காரணத்தினால் தான் தேதி, மாதம் சரியாக என்னால் சொல்லமுடியவில்லை என்றாலும், மேற்படி ஒத்தியை திருப்பியதாக தாக்கல் செய்த பி.வாசா.ஆ10 ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி மதியழகன் தற்போது செம்பரை கிராமத்தில் இல்லை என்றால் அடித்து விரட்டிவிட்டார்கள். மற்றொரு பெண்ணுடன் 2ம் பிரதிவாதி ஓடிவிட்டார் என்பதால் தான் அவரை அடித்து விரட்டினார்கள் என்றால் சரியல்ல. சொத்து தகராறு காரணமாக அவரது மனைவி 1ம் வாதி மற்றும் அவரது பிள்ளைகள் அவரை அடித்து விரட்டி விட்டார்கள். அதுபோல் சம்பவம் நடந்து இருந்தால் காவல் நிலையத்தில் 2ம் பிரதிவாதி புகார் கொடுத்திருப்பார் என்றாலும், அதுபோல் சம்பவம்

எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் 2ம் பிரதிவாதி மற்றும் 5ம் பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. தற்போதும் 5ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதியுடன் பேசி கொண்டுதான் இருக்கிறார் என்றாலும், 2ம் பிரதிவாதி இருக்கும் இடம் 5ம் பிரதிவாதிக்கு தெரியும் என்றாலும் அது பற்றி எனக்கு தெரியாது. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவருவதாலும், வாதிகளிடமிருந்து வழக்கு சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதால் நான் 5ம் பிரதிவாதியுடன் சேர்ந்து கொண்டு மோசடியாக பிவா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.6 வரையுள்ள ஆவணங்களை தயார் செய்தோம் என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டும் தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை 5ம் பிரதிவாதி அடைய முடியவில்லை என்பதால் தான் ரெங்கராஜ், சந்திரசேகர் போன்ற நபர்கள் பெயருக்கு பெயரளவில் ஆவணம் எழுதிக்கொடுத்துவிட்டு வாதிகளை விரட்ட முயற்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் கணேஷன் மற்றும் 5ம் பிரதிவாதி எந்த காலத்திலும் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல.